# ஆதிகோவிலடியில் போரூட் ஸ்தாபன உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட ஆதிசக்தி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கமும் கிராம அபிவிருத்தி வங்கியும்
# ATHISAKTHY THRIET SOCIETY AND VILLAGE DEVELOPMENT BANK

1987ம் ஆண்டு மே மாதம் நடைபெற்றதும் ஸ்ரீலங்கா இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்டதுமான ''ஒபரேசன் லிபரேசன்'' எனும் நடவெடிக்கையால் வல்வெட்டித்துறை இராணுவ முகாமின் அருகில் அமைந்துள்ள எமது கிராமம் ஏறக்குறைய முற்று முழுதாக பாதிக்கப்பட்டு மக்கள் வீடு வாசல்களையும் கடற்தொழில் உபகரணங்களையும் இழந்து அல்லல் பட்டனர். இவ்வேளையில் இவ் அழிவுகளை ஆவணப்படுத்தும் நோக்கில் இலங்கை வங்கியில் கடமை புரிந்துகொண்டிருந்தவரும் ஆதிகோவிலடி மண்ணை பிறப்பிடமாகக் கொண்டவரும் இவ் ஆவணத்தின் தொகுப்பாளருமாகிய நடராஜா சிவரட்ணம், வவுனியாவில் இருந்து கொழும்பிற்கு புகையிரதத்தில் சென்று கொண்டிருக்கையில் தனது இருக்கையின் அருகில் இருந்தவருடன் இவ் அழிவுகள் பற்றி அளவளாவிக் கொண்டு சென்றிருந்தார்.

அந்தநபர் வேறு யாருமல்ல திரு.ஆனந்தராஜா எனும் அரச சார்பற்ற போரூட் என்னும் நிறுவனத்தின் கடமை புரிந்து கொண்டிருந்தவராவர். இவர் எம்மை அணுகி ஆதிகோவிலடியின் அன்றைய நிலவரத்தை அறிந்து எம் மக்களுக்கு உதவி செய்ய முன்வந்தார். இவற்றுள் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1.மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை திருத்துவதற்காக கூரைத்தகடுகள் மற்றும் சீமெந்து என்பன வழங்கியமை.

2.பொது மலசல கூடங்களையும் பொது கிணறுகளையும் புனருத்தாரணம் செய்தமை.

3.நல்லொழுக்க வாலிப சங்கத்தை உருவாக்கியமை.

4. இச் சங்கத்தினூடாக பாலர் பாடசாலையை உருவாக்கியமை.

5.சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கத்தினை உருவாக்குவதற்கான முன் ஏற்பாடுகளை செய்தமை.

இதன் அடிப்படையில் பொதுக் கூட்டத்திற்கான பூர்வாங்க வேலைகளை செய்து கூட்டத்தை கூட்டி அதற்குரிய நிர்வாக சபையையும் ஏங்படுத்தி தந்தார்.

மேலும் ஆதிசக்தி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கமும் கிராம அபிவிருத்தி வங்கியும் (ATHISAKTHY THRIET SOCIETY AND VILLAGE DEVELOPMENT BANK) பதிவு செய்து (பதிவு இல. J/2032) ஆதிசக்தி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கத்தினை வடமராட்சியில் போரூட் நிறுவனத்தின் நிதி உதவியுடனான **முதலாவது** கிளையாக ஆரம்பித்து வைத்து எமக்கு தேவையான அறிவுரைகளை கூறி வழிநடத்தி வந்தார். இவர் இக்காலப் பகுதியில் பெரும்பாலான நாட்களை எம்முடன் கழித்ததுடன் போரூட் நிறுவனத்திடமிருந்து கடன் அடிப்படையில் ஒரு தொகைப்பணத்தை வழங்கி கிராம அபிவிருத்தி வங்கியை இயங்க செய்தார். இச் சங்கத்தின் நடவெடிக்கைகள் 22.02.1988ல் ஆரம்பமானது. எமது ஆரம்ப கால நிர்வாக சபை உறுப்பினர்களின் விபரம் பின்வருமாறு:-

- தலைவர் - திரு.த. சுந்தரலிங்கம்
- உப தலைவர் - திரு.சி.விஜியகுமார்

- செயலாளர் - திரு.நா.தேவசிகாமணி
- உப செயலாளர் - திரு.இ.முரசொலி
- பொருளாளர் - திரு.ந.சிவரட்ணம்
- செயற்குழு உறுப்பினர்கள்
  - திரு.மு.ஞானரெத்தினம்
  - திரு.மு.இந்திரலிங்கம்
  - திரு.இ.அருச்சுணராசா
  - திரு.பெ.அருமைராசா( நடவெடிக்கை குழு உறுப்பினர்)
  - செல்வி.த.புஸ்பராணி
  - செல்வி.சோ.அருள்மகள்

- **ஒரு சில வரலாற்று குறிப்புக்கள்**

கிராமிய வங்கியின் செயற்பாடுகள் முதன் முதலில் காலம்சென்ற திரு. செல்லையா துரைசாமி (சிங்கப்பூர் அப்பா) அதாவது தற்சமயம் கனடாவில் வசிக்கும் மகன் கணேசரத்தினம் அவர்களின் வீட்டில் செயற்பட்டு வந்தது அதனைத் தொடர்ந்து 1990ல் இருந்து தீருவிலில் அமைந்துள்ள பொருளாளர் திரு.ந.சிவரட்ணம் வீட்டில் இயங்கி வந்தது.

பின்னர் தலைமைப் பதவியை திரு.சு.சேதுலிங்கம் வகித்து பணியாற்றினார். புின்னர் உப தலைவராகிய திரு.சி.விஜியகுமார் அவர்களும் சிறிது காலம் பணியாற்றினார். இறுதியாக திரு.இ.இந்திரராசா(கக்கன்) அவர்கள் இப் பதவியை வகித்தார். அதேபோன்று பின்வருவோரும் செயற்குழு உறுப்பினர்களாக பணியாற்றினார்கள்.

- திரு. இ. சிவசுந்தரம்
- திரு. த .பரமானந்தராசா
- திரு. த. சண்முகராசா
- திரு. சி. தர்மகுலராசா
- திரு. த. சண்முகவடிவேல்
- திரு. மு. பத்மநாதன்
- திரு. பொ. கலைச்செல்வன்
- திருமதி. கு. தயாமதி

இக்கிரம அபிவிருத்தி வங்கியின் ஊழியர்களாக பின்வருவோர்களைக் குறிப்பாக கூறலாம்.

- செல்வி.த.அணுராதா
- செல்வி .ப.பூங்குழலி
- செல்வி.அ.மஞ்சுளா
- செல்வி.கு.தயாமதி

} இவர்களுக்குரிய ஊழியர் சேமலாப நிதி கூட சங்கத்தினால் வழங்கப்படாமலே உள்ளது.

குறிப்பு :- இச் சங்கத்தில் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை சுயநலம் கருதாது உழைத்த நிர்வாக சபை உறுப்பினர்கள், நடவெடிக்கைகுழு உறுப்பினர்கள் மற்றும் வங்கி ஊழியர்கள் ஆகிய அனைவருக்கும் இச் சங்கத்தின் மூலகர்த்தாவாக செயற்பட்டு வந்த நடராஜா சிவரட்ணம் (ஆதிகோவிடி ஜெயம்) ஆகிய நான் எனது சார்பிலும் ஆதிகோவிலடி மக்கள் சார்பிலும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறேன்.

**எமது பதிவுகளின்படி 1995ம் ஆண்டு ..**

I. அங்கத்தவர்கள் தொகை – 350

II. 1995ற்கு முன்னர் சுழற்சி முறையில் 235 பயனாளிகளுக்கு கடன் வழங்கியிருந்தோம் 1995ல் அங்கத்தவர்களினதும் சிறுவர்களினதும் பணங்களிலிருந்து 100 பேருக்கு வழங்கிய கடன் ரூபா 488000 நிலுவையாக காணப்பட்டது.

III. 1995ல் செலுத்தப்படவேண்டிய சேமிப்பு தொகை ரூபா 540000 ஆக இருந்தது.

எமது சங்கத்தின் நிலைப்பாட்டை விளக்கி 01.01.2001 இலும் 01.08.2010 இலும் அங்கத்தவர்களுக்கும் பொது மக்களுக்கும் விநியோகிக்கப்பட்ட கடிதங்களின் விபரங்களை கீழே காணலாம்.

**********************************************************************

**01.**

**ஆதிசக்தி சிக்கன கடன் வழங்கு**

**கூட்டுறவுச் சங்கம்**

**<u>வல்வெட்டித்துறை</u>**

**பதிவு இல: J.2032**

*அன்பார்ந்த ஆதிகோவிலடி மக்களே!*

**உங்கள் சிந்தனையை எம் பக்கம் திருப்புங்கள்.**

பின்தங்கியுள்ள எமது ஊரின் முன்னேற்றத்தை முதற் பொருளாகக் கொண்டு இச் சங்கம் 1988ல் போரூட் நிறுவனத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டமை நீங்கள் அறிந்ததே!

ஆரம்ப காலத்தில் எம்மக்கள் மிக ஒழுங்கானவர்களாக இருந்து கடன்களைப் பெற்று மீளச் செலுத்தி பரிசில்களும் பெற்றார்கள். இதனால் கிடைத்த இலாபத்தினைப் பயன்படுத்தி பல பொதுக் காரியங்களைச் செய்ததுடன் கல்வி வளர்ச்சியையும் ஊக்குவித்து வந்தோம்.

அரசாங்க வங்கிகளைவிட கூடிய வட்டி வழங்கியமையால் பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் பெயரில் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து பெரும்தொகையை எம்முடன் வைப்புச் செய்தனர். சில வருடங்களின் பின்னர் போரூட் நிறுவனத்திற்குரிய கடனை முழுக்க மீளச் செலுத்தி பிள்ளைகளின் சேமிப்புப் பணத்தினையே அங்கத்தவர்களுக்கு கடனாக வழங்கினோம். இதை அறியாத பலர் படிப்படியாக கடனை திருப்பி செலுத்துவதில் பின்னடித்தனர். இதனால் நாங்கள் “பொலிஸ்” நடவெடிக்கையும் எடுக்க நேர்ந்தது.

1995ல் நாட்டில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தமையால் எமது செயற்பாடுகளும் தடைப்பட்டன. மீண்டும் 1999ல் எமது நடவெடிக்கைகளை ஆரம்பித்து கடன் வழங்கி வருகின்றோம். மக்கள் இடம்பெயர்ந்திருந்த அதாவது சங்கம் செயற்படாது இந்த காலத்திற்கு கடன்பட்டவர்களால் செலுத்தப்பட வேண்டிய வட்டியில் 50% த்தை வசூலிக்காமல் சலுகையும் வழங்கினோம்.

## *இப்பொழுது நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள்.*

- கடனைப் பெற்றவர்கள் **வட்டிச் சலுகையுடனும்** திருப்பிச் செலுத்தாமல் இருக்கிறார்கள்
- இதனால் புதிய கடன்களை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
- சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்தவர்களுக்கு வட்டி வழங்குவதில் இன்னல்களை எதிர்நோக்குகிறோம்.(இருப்பினும் எமது முழு வழங்களையும் பயன்படுத்தி 2000 ஆம் ஆண்டு வரை வட்டி செலுத்தி உள்ளோம்)
- எமது விருப்பத்திற்கும் ஊரின் கௌரவத்திற்கும் எதிராக பொலிஸ் நிலையம் செல்ல வேண்டி உள்ளது.
- வடமராட்சியில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட இம்மாதிரியான எமது சங்கத்தைவிட பிந்தி ஆரம்பிக்கப்பட்ட சங்கங்கள் அந்தந்த ஊர்மக்களின் ஊர்கப்பற்றாலும், அவர்களின் நேர்மையாலும் பல முன்னேற்றங்களை கண்டு எம்மை எள்ளி நகையாடும் நிலையில் நாம் உள்ளோம்.

## *நாம் செய்ய வேண்டியது என்ன?*

நாடு நமக்கு என்ன செய்தது என்று கேட்பதை விடுத்து நாம் நாட்டுக்கு என்ன செய்தோம் என ஒவ்வொருவரும் கேட்க வேண்டும்.

எனவே இவ்வூர் மக்கள் யாவரும் எமது ஊரின் முன்னேற்றம் பற்றி ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

## நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான்.

- கடனைப் பெற்று மீளச் செலுத்தாதவர்கள் தம் மனச்சாட்சியைத் தொட்டுப்பார்த்து தாமாகவே கடனை மீளச்செலுத்த முன்வர வேண்டும். ‘‘பொலிஸ்’’ நடவெடிக்கையை தவிர்க்க வேண்டும்.
- தாங்கள் செலுத்தாமல் இருக்கும் ஒவ்வொரு ரூபாவும் இந்த ஊரிலுள்ள உங்கள் பிள்ளைகளின் எதிர் காலத்திற்கு உதவும் அவர்களின் பணம் என்பதை உணர வேண்டும்.
- இந்த ஊரில் அபிமானமுள்ள பொதுமக்கள் ஒவ்வொருவரும் ஏனோதானோ என்று இருக்காது முன்னேற்றத்தினை ஊக்குவிக்க வேண்டும்.
- இளைஞர்கள் யுவதிகள் எமது சங்க நடவெடிக்கைகளில் பங்கு கொள்ள முன்வந்து நிர்வாகத்தில் முக்கிய பொறுப்புக்களை ஏற்று நடவெடிக்கைகளை சுறுசுறுப்பாக்க வேண்டும்.

## *இதனால் எமக்கு என்ன நன்மைகள்?*

- எமது ஆதிகோவிலடி மக்கள் எந்த விடயத்திலும் மற்றவர்களுக்கு அடுத்தவர்கள் அல்ல என்று தலை நிமிர்ந்து கூறலாம்.
- கல்வியை ஊக்குவிக்க வாய்ப்பு உண்டாவதடன் கூடிய எண்ணிக்கையான மாணவர்களை சர்வகலாசாலைக்கு அனுப்பும் இலக்கை அடைய முடியும்.
- சுங்கம் வளர்ச்சியடைந்து போதிய இலாபம் ஈட்டும் பட்சத்தில் ஊர் முன்னேற்றத்திற்காக மக்கள் விரும்பும் பணிகளில் அவற்றை செலவு செய்ய முடியும்.

***அன்பார்ந்த ஆதிகோவிலடி வாழ் மக்களே!***

தயவு செய்து உங்கள் சிந்தனையை மேற்கூறிய விடயங்களில் உலவ விடுங்கள். நல்லதோர் பணியாற்ற முன் வாருங்கள். நாட்டுக்காக எத்தனையோ உயிர்த் தியாகங்கள் நடந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் நான் ஊருக்காக ஒரு சிறிய தொண்டு செய்யக்கூடாதா? என்று உங்களை நீங்களே கேட்டுப்பாருங்கள்.

எதிர்வரும் பொதுக்கூட்டத்தில் நீங்கள் ஒவ்வொருவரும் கலந்து உங்கள் பங்களிப்பைத் தாருங்கள்.

**01-01-2001**

**நிர்வாகசபை**
**ஆதிசக்தி சிக்கன கடன் வழங்கு**
**கூட்டுறவுச்சங்கம் - வல்வெட்டித்துறை**

************************************************************

**02.**

திகதி:01-08-2010

ஆதிசக்தி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கம்
ஆதிகோவிலடி
வல்வெட்டித்துறை

பதிவிலக்கம்: J 2032

**<u>ஆதிகோவிலடியை மீண்டும் கட்டியெழுப்புவோம்</u>**

அன்பார்ந்த மக்களே/கடன்பெற்றோரே!

வடமராட்சியில் FORUT நிறுவனத்தின் உதவியுடன் முதன் முதலில் 1988ல் ஆரம்பிக்கப்பட்டு அந்நிறுவனத்தின் கடன்களை முற்றாக செலுத்திய பின்னர் முழுக்க முழுக்க ஆதிகோவிலடி வாழ் பொதுமக்களின் சேமிப்பில் முக்கியமாக சிறுவர் சேமிப்பில் வைப்புச்செய்யப்பட்ட பணத்தில் உங்களுக்கு கடன்களை வழங்கியிருந்தோம். ஏறக்குறைய ரூபா $4\frac{1}{2}$ லட்சம் கடன்கள் மீளச் செலுத்தப்படாமலும் அண்ணளவாக ரூபா $3\frac{1}{2}$ லட்சம் சிறுவர்களுடைய வைப்பு மீளச் செலுத்தப்படாமலும் இருந்த நிலையில் நாட்டின் சூழ்நிலை காரணமாக சங்கம் செயலிழந்துவிட்டது.

உங்களுடைய சொல்லொணாத் துன்பங்களையும் உயிர் மற்றும் உடமை இழப்புக்களையும் நாம் மனம் கொண்டுள்ளோம். இருந்தும் எமது மண்ணில் நாம் மீண்டும் புதிய உத்வேகத்துடன் தொழிற்பட்டு அங்கவீனர்கள் தேகநலம் குன்றியோர்கள் விதவைகள் மற்றும் பாதிப்படைந்தோர் வாழ்வை வளமாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

முக்கியமாக சிறுவர்களின் எதிர்கால நலனுக்காக அவர்களது சேமிப்பு பணத்தை மீளச் செலுத்தவேண்டி உள்ளது. எனவே இச்சங்கத்தை புனரமைத்து மீண்டும் செயற்படுத்துவது இன்றியமையாதது ஆகிவிட்டது.

இதற்கென "FORUT சங்கத்தை புனரமைக்கும் இடைக்கால நிர்வாகக்குழு" ஒன்று கடந்த வியாழக்கிழமை (29.07.2010) ஆதிகோவலடி மக்களால் உருவாக்கப்பட்டுள்ளது. தயவு செய்து நீங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையையும் ஒரு பகுதி வட்டியையும் செலுத்தி எமது மண்ணும் மக்களும் எதிர்காலத்தில் வளமுடன் வாழ வழிசெய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

இவ்வண்ணம்
சங்கத்தின் சார்பாக
முன்னாள் பொருளாளர்
ந.சிவரட்ணம்

திரு/திருமதி:...........................
...........................
...........................

கடன் நிலுவை ரூபா: ..............
சலுகையுடன் செலுத்த வேண்டிய வட்டி: ..............
மொத்தம் : ............

*******************************************************************

**எமது சங்கம் பின்வரும் விடயங்களிலும் அக்கறை செலுத்தி வந்தது.**

I. விதைகளுக்கு விசேட கடனடகள் வழங்கல்
II. மீன்பிடித் தொழில் அல்லாத சுயதொழிலுக்கு கடன் வழங்கல்
III. சிறுவர் சேமிப்புக்களை ஊக்குவிக்க விசேட வட்டி வழங்கல்

மற்றும்

A. பாலர் கல்வியை ஊக்குவிக்க பாலர் பாடசாலையை நிர்வகித்தல்
B. சிறுவர்களுக்கு இலவச பாடசாலை நூல்களும் சீருடையும் வழங்கல்
C. சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டியை நடத்தல்
D. கலை நிகழ்வுகளை நடாத்தல்
E. விதவைகளுக்கு வெளியாரின் உதவியுடன் மீளப்பெறப்படாத கொடுப்பனவுகளை வழங்கல்

அத்துடன் யுவதிகளின் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு தையல் பயிற்சி வகுப்புக்களையும் நடாத்தி வந்தோம்.

குறிப்பு :- பாலர் பாடசாலையை திறம்பட நிர்வகித்த ஆரம்பகால ஆசிரியர்களான செல்வி பொ.லலிதகுமாரி(பேபி ஆலடி) , செல்வி. திரு கிருஸ்ணவேணி , திருமதி யோகராணி ஆகியோரைக் குறிப்பிடலாம்.

பலவிதமான கடும் முயற்சிகள் எடுத்த போதும் சங்கத்தை மீள இயங்க வைக்கவோ வழங்கிய கடன்களை வசூலிக்கவோ சேமிப்பு வைப்பாளர்களுக்கு பணத்தை மீளச் செலுத்தவோ முடியாத நிலையாலும் பொருளாளர் ந.சிவரட்ணம் யாழ்ப்பாணத்தில் இலங்கை வங்கியில் பொறுப்பான பதவியில் இருந்தமையாலும் செயற்குழு அங்கத்தவர்கள் கூட்டங்களுக்கு சமூகம்

அளிக்காமையாலும் தனது நிலைப்பாட்டை விளக்கி நிர்வாகத்திற்கு தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்தார்.

இருந்தபோதும் அவரது முயற்சியால் 29.07.2010ல் இது சம்மந்தமாக ஆராய ஒரு பொதுக்கூட்டம் நடாத்தப்பட்டது. அதன்படி ஒரு இடைக்கால நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. ஆனால் இடைக்கால நிர்வாகமானது பழைய நிர்வாகத்தினரைக் கூட்டி அவர்களது அபிப்பிராயங்களையும் தெரிந்து கொண்டு அதன்பின் செயற்படுவது சிறந்தது என கருத்து தெரிவித்தனர். இதற்கமைய 12.08.2010 அன்று முன்னாள் பொருளாளர் திரு.ந.சிவரட்ணம் அவர்களின் இல்லதில் இடைக்கால மற்றும் பழைய நிர்வாக சபை அங்கத்தவர்கள் சிலர் கூடி பின்வரும் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

1.பொருளாளரால் வங்கியின் அப்போதைய நிலைமை விளக்கப்பட்டது.

2. இதனடிப்படையில் கடனாளிகளுக்கு கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கப்பட வேண்டும் என்றும், கடனை மீளப்பெறுவதற்கு கால எல்லை வழங்கப்படவேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் முழு வட்டியும் அறவிடப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

3. கால எல்லை கேட்பவர்கள் பற்றி குழு தீர்மானம் எடுக்க வேண்டும்.

இதற்காக புனரமைக்கப்பட்ட குழுவினர் முழு ஒத்துழைப்பு தருவதாகவும் ஏற்றுக் கொண்டனர். ஆனால் இப் புனரமைக்கப்பட்ட குழுவாலும் எந்தவித நடவெடிக்கைகளோ முன்னேற்றமோ ஏற்படுத்தமுடியாமல் போய்விட்டமை துர்அதிஸ்டமே.

31.12.2000 ஆம் ஆண்டு முடிவுற்ற வருடத்திற்கான சங்கத்தின் நிதி நிலைமை(ஐந்தொகை) பின்வருமாறு:-

| பொறுப்புக்கள் | ரூபா |
|---|---|
| 360 அங்கத்தவர்கள் பங்குப்பணம் | 36000 |
| சுாதாரண சேமிப்பு வைப்பு | 96028 |
| சிறுவர் சேமிப்பு வைப்பு | 348697 |
| விசேட சேமிப்பு | 35772 |
| 2001 ஆம் ஆண்டு பொதுக்கூட்ட செலவிற்காக ஒதுக்கியது. | 4704.25 |
| | 521201.25 |

| சொத்துக்கள் | ரூபா |
|---|---|
| தளபாடம் | 4000 |
| கடன்பட்டோர் | 408969 |
| வங்கிமீதி | 1502.58 |
| காசு மீதி | 106729.67 |
| | 521201.25 |

மேற்குறிப்பிட்ட ஐந்தொகையில் இருந்து பின்வருவனவற்றை நாம் அறியக்கூடியதாக உள்ளது.

1. எமது சங்கத்தில் 360 பேர் அங்கத்தவர்களாக இருந்துள்ளனர்.
2. கடன்களை அறவிட்டபின் மிகுதியாக சாதாரண சேமிப்பு வைப்பாளர்களுக்கு கொடுக்க வேண்டிய தொகை - 96028/-

3. இந்த அபிவிருத்தி வங்கியையும் விசேடமாக Banker என்ற முறையிலும் ந.சிவரட்ணம் அவர்களை நம்பி பெற்றோர்கள் பிள்ளைகளின் பெயரில் வைப்புச் செய்யப்பட்ட பணம் - 3481697/-
4. சில தனிப்பட்டவர்களாலும், ஸ்தாபனங்களாலும் ஊழியர் சேமகால நிதியாலும் வைப்புச் செய்யப்பட்ட விசேட சேமிப்பு - 35772/-
5. சிறுவர் சேமிப்பு கணக்குகளுக்கும், சாதாரண சேமிப்பு கணக்குகளுக்கும் உரிய வட்டி 2000 ஆம் ஆண்டு வரையில் ஏற்கனவே செலுத்தப்பட்டு பதிவாகியுள்ளது.

இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது கடன்பட்டவர்கள் செலுத்த வேண்டிய ரூபா 408969 அறவிடப்பட்டாலே சிறுவர் சேமிப்பு தொகையாகிய ரூபா 348697 ஐ நாம் செலுத்தி முடிக்க முடியும்.

ஆனால் இதைச் செலுத்தக்கூடிய வசதியுள்ளவர்கள் அநேகர் இருந்தபொழுதும் அதை அவர்கள் செலுத்த முன்வராமையால் இச்சங்கத்தின் நடவெடிக்கைகளை அறவே கைவிடவேண்டிய துர்பாக்கியநிலை எமக்கு ஏற்பட்டது. இதனால் ந.சிவரட்ணம் அவர்களுக்கும் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் வங்கி ஊழியர்களுக்கும் கெட்டபெயர்கள் ஏற்ப்பட்டுள்ளது.

காசு மீதி ரூபா 106729.67 உடைய விபரம் வருமாறு: பின்வருவோர் இதற்கு பொறுப்பாக உள்ளனர்.

| **பெயர்** | **ரூபா** |
|---|---|
| 1.திரு.நா.தேவசிகாமணி(செயலாயர்) | 12800 |
| 2.திருமதி.கு.தயாமதி (வங்கியாளர்) | 18282.50 |
| 3.திரு.பெ.அருமைரதசா(நடவெடிக்கை குழு) | 1800 |
| 4.திருமதி. புஸ்பராணி(நிர்வாகக் குழு) | 112 |
| 5.திரு.க.இந்திரராசா(தலைவர்) | 15000 |
| 6.திரு.ந.சிவரட்ணம் (பொருளாளர்) | 34813.67 |
| 7.திருமதி.கு.மஞ்சுளா | 23921.50 |
| | 106729.67 |

மேற்படி தொகைகளுக்கு அவரவர் பொறுப்பேற்றதற்கான சான்றுகள் சங்கத்தின் பதிவேடுகளில் உள்ளன.

எனது வேண்டுகோள் ….

ஆதிகோவிலடி மக்களுக்கு பொருளாதார ரீதியிலும் தொழில்சார் ரீதியிலும் வங்கித்துறையிலும் உதவிபுரிந்து அவர்களது வாழ்வை மேம்படுத்தவும் சிறுவர்களது கல்வியை ஊக்குவிக்கவும் போரூட் நிறுவனத்தினூடாக நான் எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டுள்ளமை எமது வாழ்வில் மிகப்பெரிய தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது. இதற்கு பொறுப்பானவர்கள் எமது ஊர் மக்களின்றி வேறுயாரும் அல்ல.

எமக்குபின் வடமராட்சியில் ஆரம்பிக்கப்பட்ட எத்தனையோ போரூட் நிறுவனங்கள் மிகச்சிறப்பாக இயங்கி வருகின்றன.

எனவே தற்போது ஆதிகோவிலடியில் வசிக்கும் இளைஞர்கள் யுவதிகள் முன்வந்து இயங்காநிலையிலுள்ள சங்கத்தை மீள புனரமைத்து மக்களுக்கு சேவை செய்ய முன்வருமாறு வேண்டிக் கொள்கிறேன்.

இது சாத்தியமாகும் பட்சத்தில் அறவிடப்படாத கடன்களை வசூலித்து செலுத்தப்படாமல் இருக்கின்ற சிறுவர்களின் சேமிப்பு தொகைகளை திருப்பி செலுத்த வழி பிறக்கும். எனவே ஆதிகோவிலடிவாழ் சகல மக்களுக்கும் ஆதிகோவிலடியைச் சார்ந்த பிறநாடுகளில் வசிக்கும் எமது உறவுகளுக்கும் இப்பணியைத் தொடர உதவுமாறு பொதுவான வேண்டுகோளை இத்தால் விடுக்கின்றேன்.

தொகுப்பாளர்
ந.சிவரட்ணம்
முன்னாள் பொருளாளர்

தொகுப்பு உதவியாளர்
கு.தயாமதி
வங்கியாளர்